# இல. பிரச்னை: ஐ.நா. விசாரணை நடத்தவேண்டும்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 20 இதழ் 207
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 05—09 199?

## அமெ. அமைப்பு கோரிக்கை

[மணிலா]
''இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு அடிப்படை ஜீவாதார உரிமைகள் மறுக்கப்பட்டு வருவதும் உயிர் வாழும் உத்தரவாதம் இன்றி அவர்கள் பரிதவிப்பது குறித்தும் ஐ. நா. சபை இடைக்காலமன்றம் அமைத்து விசாரணை நடாத்தவேண்டும்''
இவ்வாறு அமெரிக்காவில்
(4ம் பக்கம் பார்க்க)

## வடபகுதியில் மீண்டுமொரு இராணுவ நடவடிக்கைக்கு ஏற்பாடுகள் ஆரம்பம்

(கொழும்பு)
வடபகுதியில் மீண்டும் ஒருஇராணுவநடவடிக்கையை மேற்கொள்வதற்கான ஆயத்தங்கள் இடம்பெறறு வருவதாக கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் சேர்ணல் சரத்முனசிங்கா தெரிவித்துள்ளார்.
வடபகுதிக்கான தாக்குதல் எப்போது தொடரும் என்பதனை முன்கூட்டியே கூறமுடியாதுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.
வடக்கில் மற்றொரு இரா
4ம் பக்கம் பார்க்க)

# கிழக்கு மாகாண குண்டுவெடிப்பு சம்பவங்கள்:

# சர்வதேச சமாதான முயற்சிகளை தடுப்பதற்கு அரசுமேற்கொள்ளும்சதிமுயற்சி

## விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

(லண்டன்)

**இலங்கைத்தமிழர் பிரச்னைக்கு மத்தியஸ்தம் வகிக்க முன்வரும் உலகநாடுகளுக்கு முட்டுக்கட்டை போடும் முகமாகவே கிழக்கு மாகாணத்தில் இலங்கை அரசு குண்டுவெடிப்பு சம்பவங்களை மேற்கொண்டு வருகிறது.**

**விடுதலைப்புலிகள் லண்டனில் உள்ள அனைத்துலக செயலகத்திலிருந்து வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.**

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இலங்கையின் கிழக்குமாகாணத்தில் இவ்வாரம் இடம்பெற்ற இருகுண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு நாம் பொறுப்பு அல்ல. இலங்கை அரசே இத்தாக்குதலை மேற்கொண்டது. கடந்த ஞாயிற்றுக்கிழமை திருமலை துறைமுகப்பகுதியில் குண்டுவெடித்ததில் 9பேர் கொல்லப்பட்டனர். இரு நாட்களின் பின் மட்டக்களப்பு சாய்ந்தமருதில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் சுமார் 22 முஸ்லிம்கள் பலியானுர்கள்.
குறிப்பிட்ட தாக்குதல்
(4ம் பக்கம் பார்க்க)

## நிவாரண வெட்டு விவகாரம்: அகதிகள் திரும்புவதை இல. அரசு விரும்பவில்லை

[லண்டன்]
தமிழ்நாட்டிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவதை இலங்கை அரசு விரும்பாததினாலேயே யாழ் மாவட்ட மக்களுக்கு வழங்கிவந்த நிவாரணப்பொருள்களை இலங்கை அரசு தற்போது குறைத்துள்ளது என்று தமிழ்நாடு பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு ராமச்சந்திரன் நேற்று பி. பி. ஸி. க்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்
யாழ் மாவட்டத்திலுள்ள அகதிகளுக்கான நிவாரண
[4-ம் பக்கம் பார்க்க]

## நீதிமன்ற திர்ப்புக்களை அடக்கத்துடன்ஏற்க அரசு எப்பொழுதும் தயார்

### - ஜனுதிபதி

[கொழும்பு]
''வெற்றியையும் தோல்வியையும் பொருட்படுத்தாது நீதிமன்றத் தீர்ப்புகளை அடக்கத்துடன் ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் எப்பொழுதும் தயாராக இருக்கிறது''
ஜனுதிபதி ஆர்.பிரேமதாசா அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட ஐ. தே. கட்சி மாநாட்டில் உரையாற்றுகையில் மேற்கண்ட தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், ''தற்போதைய அரசு வெற்றியைக் கண்டு இறுமாப்படையவும் மாட்டாது,
[4ம் பக்கம் பார்க்க]

## நிவாரணத்தைக் குறைக்குமாறு அரசை ஒருபோதும் கோரவில்லை

### - அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)
யாழ் குடா நாட்டிற்குஅரச வழங்கிவரும் நிவாரணப் பொருள்களை குறைக்குமாறு நான் ஒருபோதும் அரசிடம் கோரவில்லை என்று யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நேற்று தெரிவித்தார்.
யாழ் மாவட்டத்திற்கு அரசு வழங்கும் நிவாரணத்தை குறைக்குமாறு யாழ்,அரசு அதிபர் தம்மிடம் தெரிவித்திருப்பதாக இலங்கை புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி சில்வா நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் கூறியது உண்மைக்கு முரணுனது
கடந்த காலங்களில் 60 லட்சம் ரூபா பெறுமதியான பயறு, குரக்கன், கௌபி போன்ற உபதானியங்களை
(4ம் பக்கம் பார்க்க)

## எமது சமுதாயத்தை பின்தள்ள எதிர்க்கட்சிகள் முயற்சி

### -தொண்டமான்

(கொழும்பு)
பின்தங்கிய எமது சமுதாயத்தை பின்தள்ளி வைக்கவே எதிர்க்கட்சிகள் முயற்சி செய்துவருவதாக அமைச்சர் தொண்டமான் குற்றம் சாட்டியுள்ளார்.
ஹற்றன் டிக்கோயா நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற கட்சியின் தேசிய சபைக் கூட்டத்தில் அவர் இதனை தெரிவித்தார்.
எமது அரசியல் பிரவேசத்தை எல்லோரும் பூரண சம்மதத்தோடு ஏற்றுள்ளார்
[4ம் பக்கம் பார்க்க]

## இனப்பிரச்னைக்கான தீர்வே முக்கியம்

### - அஸ்கிரிய மகாநாயக்கர்

[கண்டி]
இனப்பிரச்னைக்கு யார் விரைவான தீர்வொன்றை முன்வைக்கிறார்கள் என்பது முக்கியமல்ல. தீர்வே முக்கியம் என்று அஸ்கிரிய மகாநாயக்க தேரோ தெரிவித்
(4ம் பக்கம் பார்க்க)

## பரீட்சை வினுத்தாள் குறித்து விசாரணை

[கொழும்பு]
க. பொ. த. உயர்தரப் பரீட்சை பௌதீகவியல் வினுத்தாள் – 2 முன்கூட்டியே வெளியாகியுள்ளதாகக் கூறப்படும் புகார்கள் குறித்து விசாரணை நடைபெறவுள்ளது.
இதுதொடர்பான விசாரணையைமேற்கொள்ள சி ஐ டி. பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.
இத்தகவலை பரீட்சை ஆணையாளர் திரு. ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார். (ரி

## உரியநிதி கிடைத்ததும் நிவாரண விநியோகம் வழக்கம்போல் நடைபெறும்

### - புனர்வாழ்வு செயலர்

[கொழும்பு]
நிதிப்பற்றுக்குறை காரணமாகவே அகதிகளுக்கு வழங்கப்பட்டுவந்த உலர் உணவு நிவாரணம் குறைக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் சமூகசேவைகள் அமைச்சின் செயலாளர் திரு. கிறிஸ்டி சில்வா தெரிவித்துள்ளார்.
உரிய நிதித்தொகைகிடைத்ததும் உலர்உணவு நிவாரண விநியோகம் வழமைபோல் நடைபெறுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
யாழ். குடா அகதிகளுக்கு மட்டும இந் நிவாரணம குறைக்கப்படவில்லை. தேகிய ரீதியலே இம்மாதம் 1-ம் திகதி
(4ம் பக்கம் பார்க்க)

**குளங்கள் நிறைந்தால்**
**வளங்கள் பெருகும்**

## வரி விளம்பரம்

### சேவை

இணை வேறுபாடு அற்ற சேவைக்கு செல்லவன்! I. "Russiva" E.V.K. Anpalgan (Only) 50/44, வைரவர்கோவிலடி, கொட்டடி, யாழ்ப்பாணம். (சி-6765)

### வாங்கப்படும்

கோழித்தீன் வெற்றுப்பக்கற் நல்ல நிலைமையில் வாங்கப்படும். மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி- 2415)

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU KOLA Capsules. கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6690]

### புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்

23-8-92ல் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சை தமிழ் / கணிதம் / சிங்களம் / வினாத்தாள்கள் / விடையுடன் விற்பனையாகின்றன. துர்க்கா / ஸ்ரேஷனேர்ஸ், சுன்னாகம். (சி-2416)

### நல்லினத் தோடை

விளாத்தியில் ஒட்டிய ஒரு வருடத்தில் பலனதரும் திடகாத்திரமான சிறந்த இனத் தோடங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு இடம் துரைஐயா, நிலாவிரையடி, நவற்கிரி, புத்தூர், அல்லது இங்கிலிஸ் பார்மசி, உரும்பிராய். (சி-6581)

### அனுமதி மாதிரிப்பரீட்சை (ஆண்டு-5)

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு - 6 அனுமதி மாதிரிப் பரீட்சை [ஆண்டு - 5 மாணவர்களுக்கு] 06-09-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 11-00 மணி நேரங்களில் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) நடைபெறும். பதிவுசெய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6771)

### அக்கு பங்சர் சிகிச்சை

கொழும்பு அரச வைத்திய சாலையில் விரிவுரையாற்றி வரும் டாக்டரினால் சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது. வெற்றிகரமாக குணம் அளித்து வரும் இந்த அக்குபங்சர் சிகிச்சை முறையானது மூட்டுவாதம், ஆஸ்த்மா, நாரிப்பிடிப்பு போன்ற நீராக நட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும். நோயாளர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். திருமதி சத்தியமூர்த்தி, கருவேலடி லேன், கொக்குவில். மெடிஷன் ஆல்ரனேற்றிவா, இல. 95, யாழ். வீதி, மானிப்பாய். (சி-6774)

### வைத்திய சேவை

முகப் பருக்களா? தலைமுடி வளரவில்லையா? இளமையில் தலைமயிர் நரையா? வாத ரோகங்களா? சதை வளர்ச்சி, கழலைக்கட்டிகளா? வெண்குஷ்டம், தேமல் போன்ற சர்ம ரோகங்களா? மற்றும் மாதவிலக்குக் கோளாறு, செய்வினை, பிணிதோஷம், சூனியம் போன்றவற்றால் ஏற்பட்ட வியாதிகளுக்கும் மெஞ்ஞான ஆலோசனையுடன் நுண்ணியல் மருத்துவம். சந்திக்கும் நேரம்:- காலை 8-00 மணி பிற்பகல் 1-00 மணி வரை. வேளாங்கண்ணி வைத்திய சாலை, டாக்டர் எம். கருணாதரன், 616, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (சி-6758)



இடம் பெயர்ந்தோர் இடர் போக்க உதவிடுவீர் அவர் தம் உள்ளம் கனிய

இடம் பெயர்ந்த மக்களின் கல்வி சுகாதார சேவைக்காக

யாழ் அரிமா கழகத்தினரால் (யாழ். லயன்ஸ் கழகம்) நடாத்தப்படும்

## கலை விழா

நிகழ்ச்சிகள்

**நாடகம்:**

திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் நாடக அரங்க கல்லூரியினா வழங்கும்

### "எந்தையும் தாயும்"

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி தமிழ் மனறம் வழங்கும்

### "மானுடம் வெல்லும் வரை"

இசை

செல்வி பிரசாந்தி இராமச்சந்திரன் வழங்கும்

### "கர்நாடக இசைக்கச்சேரி"

காலம்: 12 - 09 - 1992

இடம் : சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபம்

நேரம்: மாலை 3 30 மணி

சேவை தொடர ஆதரவு தருவீர்

நன்றி

தலைவர்

யாழ் லயன்ஸ் கழகம்

(சி- 6769)



# 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 19 - 07 - 1982



உதிர்வு 06 - 08 - 1992

## செல்வி தம்பிராசா சாவிழி (கிளி)

(ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை மாணவி ஆண்டு 5)

**கண்ணீரே எங்கள் காணிக்கை ஆகட்டும்!**

அன்பின் பெருமகளே எங்கள் அருமை சர்விழியே!
பண்பின் பிறப்பிடமாய் பலர் போற்ற செல்லமாக வாழ்ந்தாயே!
உந்தன் திருவிளக்கு ஒளிவீசும் வேளையிலே!
காலையில் கல்வி பயிலச் சென்ற கிளியே!
வீடு திரும்பும் வேளையிலே!
அந்தகனே கண்வைத்தான் அம்மா நீ மறைந்தாயோ!
விதி செய்த சதியாலே ஷெல் பட்டு மாய்ந்தாயோ!
அப்பா அம்மா என்று மழலை மொழி கேட்டு ஓடி வந்த வேளையிலே!
கதியேதும் காணாது கலங்கி நின்றோம் வேதனையால்!
மண்மீது புகழ்தந்து விண்ணேக்கிச்சென்ற எங்கள் செல்லக்கிளியே!
கண்ணீரே எங்களது அன்புக் காணிக்கை ஆகட்டும்!

இங்ஙனம்

கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கும்

அப்பா, அம்மா, சகோதரர்கள், உறவினர்கள்.

கோட்டைக்காடு,
மல்லாகம். (சி-6767)


# தமிழர் வீடுகளில் தீவிர சோதனை

(மட்டுநகர்)

மண்டூர், போரதீவு, குருமண்வெளி, மகிழூர் ஆகிய கிராமங்களில் கடந்த சில நாட்களாக தமிழ்மக்களின் வீடுகள் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டன

இப்பகுதி மக்களை வெளியே எங்கும் செல்லக்கூடாது என்ற கட்டாய உத்தரவும் இராணுவத்தினரால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இக்கிராமங்களில் தேடுதல் நடத்துவதற்காக நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கூறுவிலை

இப்பல்கலைக்கழகத்திற்கு வேப்பம் விதைகள் தேவைப்படுகின்றன. வேப்பம் விதைகளை வழங்க விரும்புவோரிடமிருந்து பொறியிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன. ஒரு கிலோவின் விலையைக் குறிப்பிடுவதுடன் எத்தனை கிலோ விதைகள் வழங்கலாம் என்பதும் குறிப்பிடப்படல் வேண்டும். கடித உறையில் "வேப்பம் விதைகள் வழங்குவதற்கான கூறுவிலைகள்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும், கூறுவிலைகள் இப்பல்கலைக்கழகத்தின் விலங்கியல்துறைத் தலைவருக்கு 18-09-1992 ஆம் திகதி மு. ப. 10 00 மணிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கூறுவிலைகள் அதே நாளில் பி. ப. 2.00 மணிக்குத் திறக்கப்படும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(ஏ-2419]


## விமான சேவை

(கொழும்பு)

விமானத்தில் புகைபிடித்தலுக்கு தடை செய்யப்பட்ட விமானசேவையொன்றை ஏயர்லங்கா ஆரம்பித்துள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி முதல் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருச்சிக்கும் கொழும்புக்குமிடையே செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாட்களில் இச்சேவை நடைபெறும்.

## இராசி பலன்

**05-09-1992**

**சனிக்கிழமை**

**(தமிழுக்கு ஆவணி 20)**

நவமி மு. ப 10-04 வரை. கேட்டை மு. ப. 8-23 வரை. சித்தம், ஆவணி மூலம். இராகுகாலம் காலை 9-04 முதல் 10-34 வரை. சுபநேரம் மாலை 3 04 முதல் 4-34 வரை ஆவணிமூலம்.

மேடம்- உறவினர் துன்பம், அதிருப்தி, யோசனை.

இடபம்- குடும்ப மகிழ்ச்சி, பெண் ஆதரவு, தொழில் சிறப்பு.

மிதுனம்- பணப்புழக்கம், பகைவர் உறவு, தெய்வீக வழிபாடு.

கடகம்- ஆசைவேகம், விபரீத விளைவு, அலைச்சல்.

சிங்கம்- மனக் கொதிப்பு, பொல்லாப்பு, செலவு

கன்னி- வீணான சிந்தனை, பாச நெகிழ்ச்சி பணவரவு.

துலாம்- வீண்பேச்சு, கெட்ட கனவு, காரியதடை.

விருச்சிகம்- காரிய வெற்றி, உறவினர் உதவி, தியானம்,

தனுசு- மனைவியார் துய

[4ம் பக்கம் பார்க்க]


## கேள்வி அறிவித்தல்

யாழ், கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையிலுள்ள தேவையில்லாத கழிவு நீர் சேகரிக்கும் குழி, வடிகட்டும் தளம் ஆகியவற்றில் இருந்து சாக்கடை நீரைத்

### துப்பரவு செய்தல்

மேற்படி வேலைக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

1. இவ்வேலை சம்பந்தமான முழு விபரங்களும் இச்செயலகத்தின் பரிபாலனக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.
2. அரசாங்கத்தில் பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்கள் மாத்திரமே கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கலாம்.
3. கேள்விப் படிவங்கள் மீளளிக்கப்படும் கட்டுப் பணமாக ரூபா 25/- செலுத்தி யாழ். அரச அதிபரிடமிருந்து 1992-09-09ம் திகதி தொடக்கம் 1992-09-23ம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 10-00 மணி தொடக்கம் பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
4. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் யாழ். அரசாங்க அதிபர், மாவட்ட ஆணையர், செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு 1992-09-25ம் திகதி முற்பகல் 11-00 மணிக்கு முன்பாக கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலமாக அல்லது இதற்கென இச்செயலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் இடவேண்டும்.

கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் வேலையின் பெயர், பத்திரம் அடங்கிய தபால் உறையின் இடது பக்கத்தில் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும்.

கா. மாணிக்கவாசகர்,
அரச அதிபரும், மாவட்ட ஆணையரும்.
யாழ். மாவட்டம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்.
02-09-1992. (எ 2417)

# பாதுகாப்பு செலவு அதிகரித்து வருவதனால்
# நாட்டின் பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்படும்

அதிகரித்து வரும் பாதுகாப்பு செலவு காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்படலாம் என்று கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்று தனது அரசியல் விமர்சன கட்டுரையில் தெரிவித்துள்ளது.

அவ்விமர்சனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ராணுவ தளபாடங்கள் கூடுதலாக இறக்குமதி செய்வதினாலே இந்நிலைமை ஏற்படுகிறது. நாட்டின் பணவீக்கத்துக்கும் பாரிய ராணுவ செலவீனத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஐ. நா. அபிவிருத்தி செயலகம்கூட. பாரிய ராணுவ செலவு செய்யும் நாடுகள் சமூக நலன்களுக்கு சிறிதளவு சேவையே செய்கின்றன என சுட்டிக்காட்டியுள்ளன. பெற்ற [illegible] யாத நிலையினால் அந்நாடுகளின் காசுப் பெறுமதியும் குறைகின்றன.

இன்று இலங்கை மொத்த தேசிய உற்பத்தியின் 6சத வீதத்தினை ராணுவத்திற்காக செலவிடுகிறது. 1985க்கு முன் மொ. தே. உற்பத்தியில் 2 வீதத்திற்கும் குறைவாகவே செலவிட்டது. மொத்த தேசிய உற்பத்தியில் பாகிஸ்தான் இலங்கையைவிட கூடுதலாக 7 வீதத்தினையும், இந்தியா இலங்கையிலும் குறைய 3 வீதத்தினையுமே செலவிடுகிறது.

இலங்கையின் ராணுவச் செலவு கடந்த 5 வருடத்தில் (1987—91) 56 பில்லியன் ரூபா ஆகும். அதாவது சராசரி 11 பில்லியன் ரூபாவாகும். கடந்த வருடம் 17 பில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது. இதுமேலோட்டமாக பார்த்த செலவே, உண்மையில் கடந்த வருடம் 20 பில்லியன் செலவு ஏற்பட்டுள்ளது. இது மொத்த உள்ளூர் உற்பத்தியில் 7 வீதமாகும்.

சுகாதாரம் கல்விக்கு முன்பெல்லாம் கூடுதல் நிதி செலவு செய்யப்பட்டதாக பெருமைப்பட்டுக்கொண்டோம். இதனால் மக்களின் கல்வி அறிவு கூடியது. இளம் சிசுக்களின் மரணவீதம் குறைந்து, வாழும் நாட்களும் அதிகரித்தன.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு அபரிமிதமான ராணுவச்செலவே மூலகாரணமாகும். தற்போதைய ராணுவச் செலவு நாட்டு வருமானத்தின் 23சத வீதத்தையும், வரவு செலவுத் திட்டத்தில் 17சத வீதத்தையும் எடுத்துக்கொள்ளுகின்றது.

பாதுகாப்பு செலவு, பெற்ற கடனை திருப்பிக் கொடுப்பதிலும் பல சிக்கலை ஏற்படுத்துகின்றன. பல விலையுயர்ந்த ராணுவத் தளபாடங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. வாகனம், ரவைகள், குண்டுகள், ராணுவ ஆயுதம், விமானம், படகுகள் எரிபொருள் இன்னும் பலவும் இறக்குமதி செய்யப்படுவதனால் வெளிநாட்டு செலவாணி மூலம் நாம் பெறும் அரும் நிதி இதற்காகவே ஒதுக்கப்பட்டு வீணே போகின்றது. இதனால் ஒரு உற்பத்தியும் மேற்கொள்ளப்படுவதில்லை ஏற்றுமதி இறக்குமதியிலும் பெரும் சிக்கலையே ஏற்படுத்திவிடுகின்றன.

ராணுவச் செலவினால் நாட்டின பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கத்தை உணர்த்தியதை அடுத்தே அண்மையில் 3 வீதம் பாதுகாப்பு வரி கொண்டுவரப்பட்டதை யாவரும் அறிவர்.

இதன் தாக்கத்தைத் தற்போதைக்குச் சமாளித்தாலும் வருங்காலச் சந்ததியினர் கட்டாயம் உணர்வர்.

பொருளாதார அபிவிருத்திக்கும், உற்பத்திக்கும் செலவைக் குறைப்பதோடு பொருளாதார அபிவிருத்திப் பணிகளை அகற்றுவதனாலும், வருங்காலத்தில் பொருளாதார வளர்ச்சியில்பாரியதாக்கத்தை ஏற்படுத்தும்.

பாரிய ராணுவச் செலவை குறைக்க வழிசமைக்கவேண்டும். சண்டை ஒன்று நடைபெறும் தருணத்தில் ராணுவ செலவு அதிகரிக்கவே செய்யும். ஆகவே ராணுவ செலவின் பாதிப்பை உணர்ந்து சமாதானத்திற்கான வழி வகைகளை ஆராய்வதே சாலச் சிறந்தது. நாட்டின் சுபீட்சத்திற்கும் நல்லது. (கே-ரி)

# வீரத்தோடும், மானத்தோடும் தமிழினம் வாழவேண்டும்
## வள்ளுவர் விழாவில் யோகி

(யாழ்ப்பாணம்)

"வீரத்தோடும், மானத்தோடும் எம் தமிழினம் வாழவேண்டும். இதனையே திருக்குறளும் உணர்த்தி நிற்கின்றது."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் கல்விப் பகுதிப் பொறுப்பாளர் திரு. யோகரத்தினம் யோகி உரும்பிராய் இந்துக் கல்லூரியில நேற்று முன்தினம் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில கூறினார்.

திரு யோகி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இந்த மண்ணில எங்களுக்கென்று எதிரி இல்லாதவாறு துரத்துகின்ற துணிவு இருக்க வேண்டும். விழிப்போடு இம் மண்ணிலே எதிரி இல்லாத நாடாக வாழ்வோம்.

திருக்குறள் 2023ம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய திருவள்ளுவரால் தமிழினத்திற்கும், முழு உலகத்திற்கும் அளிக்கப்பட்ட பொது மறை நூலாகும்.

திருவள்ளுவர் தமிழுடன் கூடவே வருபவர். தமிழருக்குப் பெருமை தந்த குறளினை இரண்டு அடியில் வழங்கியவர்.

ஒன்று திருக்குறள் முழு உலகத்தையே எடுத்துக்காட்டுகிறது அடுத்து மனோரஞ்சிதத்தையும் எடுத்துக்காட்டுகிறது. மனோரஞ்சித மலரினை எப்படி நுகர்ந்தாலும் பல விதம் மணம் வீசும் அது போலவே திருக்குறள் உள்ளது.

போர்க்களத்தில் நிற்கும் எதிரியானவனை அழிக்கவேண்டும்என்பதனையும்திருக்குறளில் வரும் அறம் எடுத்துக்காட்டுகிறது.

வள்ளுவர் மிகப்பெரிய ஆற்றல் படைத்தவர். இதனால் தமிழுக்கு பெரிய சிறப்பு உள்ளது. அறிவுத்திறன் ஆனமீகம், உலகப் பொதுமறை, வாழ்க்கைநெறி, ஒழுங்கு வாழ்க்கை இலக்கணம், இலக்கியம், வழிமுறை என்பனவற்றை விளக்கி நிற்கிறது என்றார். (66-ரி)

# தமிழகத்திலிருந்து 24,000 இலங்கை அகதிகள் தாயகம் திரும்பியுள்ளனர்
## மேலும் 9,000பேர் திரும்ப இணக்கம்

(சென்னை)

தமிழகத்தில் 337 முகாம்களில் தங்கியிருந்த 1,11,000 இலங்கை அகதிகளில் இது வரை 24,000 பேர் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப் படுகிறது.

மேலும் 87,000 பேர் 133 முகாம்களில் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அகதிகளுக்கு ஒரு ஆண்டுக்கு சுமார் 24 கோடி ரூபா செலவு செய்யப்படுவதாக இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தியன் எயர் லைன்ஸ் விமானத்தில் 120 பேர் வீதமாக அனுப்பப்பட்டு வந்த இலங்கை அகதிகள் தற்போது என். வி. நிக்கோபார் என்ற கப்பல் மூலம் சராசரி 1500 பேர் வீதம் அனுப்பப் படவுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

தற்போது ஒன்பதாயிரம் இலங்கைத்தமிழ் அகதிகள் தமது சொந்த விருப்பத்தின் பேரில் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் இவர்களுக்கு ஐ நா. அகதிகள் கமிஷன் குடியிருப்பு உட்பட பல்வேறு உதவிகளைச் செய்ய முன்வந்திருப்பதாகவும் அவர் கூறினர். (ரி)

# 18 முஸ்லிம் போராளிகள் காஷ்மீரில் சுட்டுக் கொலை

(ஸ்ரீநகர்)

காஷ்மீரிலுள்ள முஸ்லிம் போராளிகளில் 18 பேர் இந்திய இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் அல்உமர் மொகைதீன் என்ற அமைப்பின் தற்காலிக தலைவரான இக்பால சார்கார் என்பவரும் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

இதேவேளை இங்குள்ள மேலும் ஒரு முஸ்லிம்போராளி குழுவைச் சேர்ந்த உயர்தலைவர் ஒருவர் உட்பட 79 முஸ்லிம் போராளிகள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ரி)

# தொண்டர் ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர் சங்கக் கூட்டம் இம்மாதம் 07ம் திகதி திங்கள் காலை 9. 30 மணிக்கு யாழ். ஸ்ரான்லிவீதியில் நடைபெறும்.

# பாகிஸ்தானுக்கு மீண்டும் இந்தியா எச்சரிக்கை

(புதுடில்லி)

இந்தியாவின் பாதுகாப்பிற்கும ஒற்றுமைக்கும் பாதகம் விளைவிக்கும் செயல்களை பாகிஸ்தான் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்திய பாதுகாப்ப அமைச்சர் சரத்பவார் எச்சரிக்கை செய்துள்ளார்.

இந்தச் செயல்களை பாகிஸ்தான் நிறுத்திக் கொள்ளா விட்டால் இப்போதைய தலைமுறைக்கு மட்டுமல்ல வருங் காலத் தலைமுறைக்கும் சேர்த்து சரியான தொரு பாடத்தை இந்தியா கற்றுத் தரும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி)

# திடீர் வெள்ளப்பெருக்கினால் ஆப்கானில் 3000 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பலத்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் மூவாயிரம் பேர் பலியானார்கள்.

இவ்வெள்ளப்பெருக்கினால் பல வீடுகள் அழிந்ததுடன் மேலும் பலர் காணமல்போய் விட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

வெள்ளத்தில் பலர் அடித்துச் செல்லப்பட்டுள்ளதினால் இறந்தவர்கள் தொகை மேலும் அதிகரிக்கலாம் என்று அங்கிருந் வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட பகுதிகளில் தாயகம் திரும்பிய அகதிகளே கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

14 ஆண்டு காலப்போக்கில் அழிந்துபோன வீடுகளை மீண்டும கட்டும் பணியை இந்த அகதிகள் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு முன்னர்தான் முடித்திருந்தார்கள்

இந்த அகதிகளின் வீடுகள் யாவும் வெள்ளப்பெருக்கினால் முற்றாக அழிந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ரி)


# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஆங்கிரச வருடம் ஆவணித் திங்கள் 22-ம் நாள் (06-09-1992) ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 முதல் 8-05 மணி வரையுள்ள சுபமுர்த்தவேளையில்:

எமது ஏக புதல்வன்
**செல்வன் பாலமுரளி**
(கண்ணன்)
அவர்களுக்கும்

மாவிட்டபுரம்கோவில் வீதி
(தற்போது அளவெட்டி தெற்கு)
திரு. V. சிங்கராசாவின் புதல்வி
**செல்வி அனுஷா**
(செல்லம்)
அவர்களுக்கும்

ஜெர்மனி, PF 1131 BAPPARD 5407 என்னும் இல்லத்தில் மங்கள நாண் பூட்டு விழா நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகிய யாவருக்கும் அறியத் தருகிறோம்.

செ. கந்தசாமியும் பாரியாரும்,
(இளைப்பாறிய நெசவு ஆசிரியர்),
மீசாலை தெற்கு,
மீசாலை.

V. சிங்கராசாவும் பாரியாரும்,
(பிரபல வர்த்தகர்),
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

(எ-2413)


# பல்கலைக்கழக அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலிருந்து 67 பேர் 1990/91 ம் ஆண்டுக்கான கல்வி யாண்டிற்கு பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப் பட உள்ளனர்.

ஒவ்வொரு துறைக்கும் தெரிவு செய்யப்பட உள்ள மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

பொறியியல் - 20, மருத்துவம் - 11, பௌதிக விஞ்ஞானம் - 26, மிருகவைத்தியம் - 03, உயிரியல் விஞ்ஞானம் - 02, விவசாயம் -03, முகாமைத்துவம் - 02.

# 17ம் திகதி விருது வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விருதுகள் வழங்கும் வைபவம் எதிர்வரும் 17ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

### வடக்கு-கிழக்கு பகுதியில் தமிழில் தொடர்பு கொள்ளுமாறு

# திணைக்களங்களுக்கு பணிப்பு

(திருமலை)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள சகல திணைக்களங்களும் தங்களது சகல தொடர்புகளையும் தமிழில் மேற்கொள்ளுமாறு வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலர் திரு எஸ். கணேசநாதன் உத்தரவிட்டுள்ளார்.

இம் மாகாணத்தில் பல திணைக்களங்கள் தமது தொடர்புகளை ஆங்கில மொழியில் மாத்திரம் மேற்கொள்வதால் பொதுமக்கள் பெரும் சிரமமடைவதாக அரசகரும மொழி ஆணைக்குழுவின் கவனத்திற்கு புகார் தெரிவிக்கப்பட்டதையடுத்தே இந்த உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து திரு. கணேசநாதன் தங்களின் கீழுள்ள சகல திணைக்களங்களுக்கும் இதனை அறிவிக்குமாறு சுற்று நிருபம் ஒன்றையும் அனுப்பியுள்ளார். (சி)

# கிழக்கில் தீவிர ராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகளை தீவிரபபடுத்துவது பற்றிப் பாதுகாப்பு அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

திருமலை, சாய்ந்தமருதுப் பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற வெடிகுண்டுச் சம்பவங்களைத் தொடர்ந்து கிழக்குமாகாணத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இப்பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெறும் தாக்குதல்களை அடக்குவதற்கு இராணுவ ரீதியான நடவடிக்கைகளை முன்கூட்டியே எடுப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

# இன்று யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 12-வது பட்டமளிப்பு விழா இன்று கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமை தாங்குவார்.

இப்பட்டமளிப்பு விழா இரு அமர்வுகளாக நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதலாவது அமர்வில் கலைமாணி, சித்தமருத்துவ சத்திரசிகிச்சைமாணி இசைக் கலைமாணிப் பட்டமளிப்பும்: இரண்டாவது அமர்வில் மருத்துவமாணி, சத்திரசிகிச்சைமாணி, விஞ்ஞானமாணி, வர்த்தகமாணி. தொழில் நிர்வாகமாணிப் பட்டமளிப்பும் இடம்பெறும்.

ஒவ்வொரு அமர்வுகளின முடிவிலும் திறமைமிக்க மாணவர்களுக்குப் பரிசில்கள். புலமைப் பரிசில்கள் என்பன வழங்கப்படும்.

இவ்வாண்டும் முதல்நிலைப் பட்டங்களுடன் கலாநிதி, முதுகலைமாணி, முதுவிஞ்ஞானமாணி, முதுமெய்யியல்மாணி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா முதலிய பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. இப்பட்டங்களை, இப்பல்கலைக்கழகத்திற்பயின்ற 610 மாணவர்கள் பெறுகின்றனர்.

# நாடு திரும்பமறுத்த அகதிகளுக்கு நிவாரணம் வழங்க மறுப்பு

(சென்னை)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு திரும்பிச்செல்ல மறுத்த 48 அகதிக் குடும்பங்களிற்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் மறுக்கப்பட்டதாகவும் நிவாரண அட்டை மற்றும் பணம் ஆகியன முகாம் பொறுப்பாளரினால் பறிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன்.

இதேவேளையில் சென்னை இடைத்தங்கல் அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் தாம் வலுக்கட்டாயமாக அழைத்துவரப்பட்டதாக ஐ. நா. மன்ற அகதிகள் பராமரிப்புக் குழுவின் பிரதிநிதிகளிடம் முறையிட்டதையடுத்து இவ் அகதிகள் தத்தமது பழைய முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## உயர்கல்வி பின்னடைவு

(யாழ்ப்பாணம்)

1992-ம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியெய்திய மாணவர்கள் பெரும்பாலும் 1994-ம் ஆண்டு தான் பல்கலைக்கழகத்துக்குச் செல்லக்கூடியதாக இருக்கலாம் என்று பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்தில் உரிய காலங்களில் பரீட்சைகள் நடைபெறுது போனபடியால்தான் இந்தப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்று மேலும் கூறப்பட்டுள்ளது. (இ-சு)

# நிவாரண குறைப்பு அரசின் திட்டமிட்ட செயல்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்களின் நிவாரணத்தை அரசு திட்டமிட்டு குறைப்பதை தீவக நலன்காக்கும் ஒன்றியம் வன்மையாகக்கண்டித்துள்ளது

இதுசம்பந்தமாக வெளியிட்ட அறிக்கையில் மேற்படி ஒன்றியம் தெரிவித்திருப்பதாவது: ஏற்கலவே. கஷ்டங்கள் துன்பங்கள் மத்தியில் அரைப் பட்டினியாக வாழும் மக்களை இந்தச்செய்தி வெகுவாகப் பாதித்துள்ளது என்றும், ஜனாதிபதிக்கும் புனர்வாழ்வு அமைச்சுக்கும் நிவாரணக் குறைப்பை மீள் பரிசீலனை செய்யுமாறு மகஜர் மூலம் கேட்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-சு)

# இராணுவ அதிகாரிகளின் மரணம் குறித்து ஜனாதிபதி

(கொழும்பு)

இராணுவ அதிகாரிகள் மரணமடைந்தால், சாதாரண சிவில் அதிகாரிகளின் மரணச் சடங்கின்போது கைக்கொள்ளப்படும் நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. அவர்களுக்கெனத் தனியான வரையறுக்கப்பட்ட சில விதிமுறைகள் உண்டு அதன் படியே மறைந்த இராணுவத் தளபதிகளின் இறுதிக்கிரியை நடைபெற்றன.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அனுராதபுரத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் :- மறைந்த இராணுவ அதிகாரிகளுக்குத் தேசிய துக்கதினம் அனுஷ்டிப்பது வழக்கமல்லவென்றும உலகின் எந்த நாட்டிலும் இந் நடைமுறை கிடையாதென்றும் தெரிவித்துள்ளார். (ஐ)

# நிவாரண வெட்டு இம்மாதம் முதல் அமுல்

(யாழ்ப்பாணம்)

"அரசாங்கத்தின்தீர்மானப்படி 1992-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்துக்குரிய உலர் உணவு நிவாரணம் ஐம்பது வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது" என்று யாழ். அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்களுக்கும பிரதேச செயலாளர்களுக்கும், பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பொதுமுகாமையாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில குறிப்பிட்டுள்ளார்.

இதன்பிரகாரம் இனிமேல் செப்டெம்பர் மாதம் தொடக்கம் ஒரு மாதத்துக்கு இருமுறை நிவாரணங்கள் வழங்கப்படவேண்டுமென்றும், அவை முதலாம் திகதியில் இருந்து 15-ந் திகதி வரை ஒரு கட்டமாகவும், 16-ந் திகதியில் இருந்து 30-ந் திகதி வரை இரண்டாவது கட்டமாகவும் கொடுக்கப்பட வேண்டுமென்றும்—

எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்த இரண்டு நிவாரணங்களும் ஒருமித்து வழங்கப்படக்கூடாதென்றும் தமது அறிக்கையில் அரசாங்க அதிபர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ-சு-61)

### இல. பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள இந்திய வம்சாவழி மக்களுக்கான உளசுளாக்ய அமைப்பு ஐ. நா. சபைக்கு அனுப்பியுள்ள மனுவில் தெரிவிததுள்ளது.

அம்மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இலங்கைத் தமிழர்கள் எந்த வித விசாரணையும் இன்றிக் கைது செய்யப்படுவதும், சிறைக்கூடங்களிலும் சித்திரவதை முகாம்களிலும் அவர்கள் தொடர்ச்சியாகதுன்புறுத்தப்படுதலும். நீதிக்குப்புறம்பான முறையில் கொலைசெய்யப்படுவதும திட்டமிட்ட ரீதியில் தமிழ்மக்களை பூண்டோடு அழிக்கும முயற்சிகள் தொடர்வதாகவும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-சி)

### கிழக்கு மாகாண

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பாவி மக்களுக்கு எதிரான கோழைத்தனமான வன்செயல்

இப்படியான தாக்குதலால் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் உள்ள பிரிவுகள் பிளவுகளால் ஸ்ரீலங்கா அரசு மட்டுமே பயனடையும்.

மேலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் காணமல் போனதற்கு பொறுப்பாகவிருந்த ஓர் அரசு தனது சொந்த நோக்கங்களை அடைவதற்காக இப்படிப்பட்ட தாக்குதல்களை நடாத்த தயங்கமாட்டாது.

அப்பாவி பொதுமக்களை விடுதலைப்புலிகள் கோழைத்தனமாக குண்டு வைத்துக் கொலை செய்து வருகிறார்கள் என்று உலகநாடுகளுக்கு பறைசாற்றி, விடுதலைப்புலிகளுக்கு மாசு ஏற்படுத்தி இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு மத்தியஸ்தம் வகிக்க முன்வரும் நாடுகளுக்கு முட்டுக்கட்டை போடுவதே இலங்கை அரசின் முக்கிய நோக்கமாகும்.

### நிவாரண வெட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

த்தைகுறைப்பதென இலங்கை அரசு எடுத்த முடிவு இலங்கைத் தமிழர்களை அனுப்புவதற்கு தமிழ்நாடு எடுதத திட்டத்தை நிறுத்துமாறு தமிழ்நாட்டுக்கு கூடுதல் நெருககடியைக கொடுப்பதே இலங்கை அரசின் முக்கிய நோக்கமாகும்

இலங்கையில் இனப்பிரச்னைக்கு தீர்வு ஏற்படும்வரை இலங்கைத்தமிழர்களை திருப்பி அனுப்பக் கூடாது என்ற தீர்மானத்தை தாம் விரைவில் தமிழக சட்டசபையில் கொண்டுவர இருப்பதாகவும் திரு. ராமச்சந்திரன் தனது பேட்டியில் மேலும். தெரிவித்துள்ளார்.

இதேநேரம் மேற்படி நிவாரணக் குறைப்புப் பற்றி ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கருத்துத் தெரிவிக்கையில்: இது ஒரு தற்காலிக நடவடிக்கை தான். அகதிகள் பராமரிப்பு நிதி உலக நாடுகளிடமிருந்து தொடர்ந்து கிடைத்தால் இதை நாம் சமாளித்துவிடுவோம் என்றும் கூறியுள்ளார்.

## அனுமதி மறுப்பு

(சென்னை)

இராமேஸ்வரம பகுதியில் உள்ள மண்டபம் அகதி முகாமிற்குச் சென்ற ஐ. நா. மன்றத்தின் புதுடில்லி அகதிகள் பராமரிப்புக்குழுவின் பாதுகாப்பு அதிகாரி டபிள்யூ எம். லிங் அம்மையாருக்கு தமிழ் அகதிகள் தங்கியிருக்கும் முகாமிற்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி முகாமில் தங்கியிருக்கும் இலங்கைத்தமிழ் அகதிகள் வலுக்கட்டாயமாக கொண்டு வரப்பட்டார்களா அல்லது தாமாகவே விரும்பி வந்தார்களா என்பதனை நேரில் அறியும்பொருட்டே குறிப்பிடப்பட்ட ஐ. நா. அதிகாரி மண்டபம் முகாமிற்குச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது. (க)

### வடபகுதியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணுவ நடவடிக்கைக்கு தயாரான நிலையில் படைகளும், இராணுவ தளபாடங்களும் ஆயததமான நிலையில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை கிழக்கில் இடைநிறுத்தப்படாமல் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் அவர் கூறினர்.

வடபகுதி மீதான தாக்குதல் தொடர்பாக படையினருக்கும், படைத்தளபதிகளுக்கும் விரைவில் அறிவுறுத்தல் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ரி)

### எமது சமுதாயத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்று எண்ணிவிடக்கூடாது எனறும் அவர் மேலும் கூறினர். (ரி)

### நிவாரணத்தை

(1-ம பக்கத் தொடர்ச்சி)

அரசு இங்கு அனுப்பியிருந்தது. இவை பெரும்பாலும் பழுதடைந்த நிலையிலேயே இருந்தமையால் இவற்றை மக்கள் வாங்குவதற்கு முன் வரவில்லை. இதேநேரம் மேற்படி உபதானிய வகைகள் உள்ளூரிலேயே பெருமளவு உற்பத்தி செய்யப்பட்டு வந்தமையினலேயே இதுபோன்ற உபதானியப் பொருள்களை இங்கு அனுப்பவேண்டாமெனக் கோரியிருந்தேன்.

ஆனல புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் கூறியது போல், நிவாரணப் பொருள்களை குறைக்குமாறு நான் ஒருபோதும் கோரிக்கைவிடவில்லையென்று யாழ். அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (வி)

### இராசி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ரம், சிறு பிணி, அகாலபோஜனம்.

மகரம்- சத்துரு ஜயம், தொழில்லாபம், பெருமை.

கும்பம்: மன ஒத்துழைப்பு, கடன வரவு, புதியமுயற்சி.

மீனம்- செல்வாக்கு மறையும், உற்சாகக் குறைவு, கடமை தவறுதல்.

— ஜோஸ்யன்

### நீதிமன்ற

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தோல்வியைக்கண்டு மனம் தளரவும்மாட்டாது. என்றலும் தேர்தல் நடைபெற்று ஜனாதிபதியிடம் நிறைவேற்று அதிகாரம் ஒப்படைக்கப்படாவிட்டால் நாட்டின் அரசியல் யாப்பு ஒழிக்கப்பட்டிருக்கும் என்றும் தெரிவித்தார். (சி க)

### இனப்பிரச்னைக்கான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தள்ளார்.

மேற்படி தேரோவை முஸ்லிம் காங்கிரஸ் குழுவொன்று கண்டியில் சந்தித்து உரையாடியது.

முஸ்லிம் காங்கிரஸ் சமர்ப்பித்துள்ள பிரேரணைகள் தொடர்பாக நன்கு ஆராயப்பட்ட பின்னரே அதுகுறித்து கருத்து தெரிவிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (இ-ரி)

### உரிய நிதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிலிருந்து நிவாரணம் குறைக்கப்பட்டுவிட்டது இதனை நிவர்த்திசெய்ய திறைசேரியிலிருந்து நிதிகோரியுள்ளோம். அத்தோடு யாழ். மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இந்த இடயத்தில் மக்களுக்கு உதவுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் இவன்ஹோவிக் மேற்கு வீதி [illegible] அச்சகத்தில் 1992-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05ம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுவது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/